# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,254 — 1922 ம் ௵ சித்திரைமீ 28 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ரேட்டுக்கும் வெளியிடத்துக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,724. குறிச்சி—நீர்கொழும்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 ம் இலக்கத்தின் பகுதி | ஓட்டால்வேய்ந்த கல்கடையுள்ளது .. | சி. டி. டல்படாடோ .. | 0 | 0 | 7.12 |
| 13 | 9 ம் ஷை .. | கிடுகால்வேய்ந்தமண்வீட்டின் பகுதியுள்ளது | மேறியா ரெட்டிறீகோ | 0 | 0 | 1·75 |
| 14 | 9 ம் ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 3·51 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1871 ம் ௵-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்வருடைய காரியகாரர்மூலமாய் 1922 ம் ௵ மேமாசம் 25 ந் தேதியிலன்று 10 மணிக்கு நீர்கொழும்பு ஏர்பன்டிஸ்திறிக் கவுன்சிலின் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்குஅக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1922 ம் ௵ ஏப்பிறில்மீ 22 ந் உ

எச். ஈ. நியூன்காம்,
கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கண்டி ஆஸ்பத்திரியின் பணம்கொடுத்து வைத்தியம்பார்க்கும் வார்ட்டுக்கும் ஆஸ்பத்திரியின் டாக்டர்கள் வசிக்கும் ஸ்தானங்களுக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,234. குறிச்சி—கண்டியிலிருக்கும் தேய்யன்னவெலை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கப்புகஸ்பிற்றியவத்தை 63A ம் வரி இலக்கமுள்ள காணி | சுதேச தோட்டம் .. | டபிள்யு. பிரான்சிஸ் .. | 0 | 0 | 19·5 |
| 2 | கப்புகஸ்பிற்றியவத்தை .. | ஷை .. | எவ். கேராத் .. .. | 0 | 0 | 2·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ௵ மேமாசம் 23 ந் திகதியிலன்று பிற்பகல் 2 மணிக்குக் கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1922 ம் ௵ ஏப்பிரல்மீ 28 ந் உ.

ரீ. ஜி. வில்லஜ்,
கண்டி டிஸ்திறிக்ற் உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மெனிக்டிவெலேயிலிருக்கும் அரசாட்சிப் பாடசாலையை விசாலப்படுத்த என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,284. குறிச்சி—யட்டிகம்மன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | டங்கொலேகேன அல்லது யெனிய கராமடித்தேகேன | தேயிலே .. | இ. லொக்கு பண்டாவும் மற்றவர்களும் .. | 0 1 36·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ௵ மேய் (வைகாசி) மாசம் 23 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களேயும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1922 ம் ௵ ஏப்றில்மீ 28 ௳.

ஸீ. எஸ். வோன்,
மத்தியமாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 8,079, கொழும்பு.]

1897 ம், 1899, 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களேப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னுற் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானுல், அவர்கள், 1922 ம் ௵ (ஏப்பிரல்) சித்திரைமீ 28 ௳ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் அல்லது எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அவைகளிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினுல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஏச். ஈ. நியூன்காம்,
கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

கவனிப்பு.—குறித்த காணிகளுக்கூடாகவிருக்கும் வழிப்பாதை உரித்து காணிகளிலுள்ள சோந்தைக் குரித்து.

குறித்த காணிகளின் விபரம்.

மேல் மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் அதுக்குறு கோறளை தெற்கிலுள்ள ருகம்பத்துவில் ஏக்கல குருவந்துவத்த என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைத்திருக்கும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 17,216.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 2 .. | கொறகஸ்லங்கவத்த .. .. .. .. | 0 0 0·64 |

எல்லேகளாவன: வடக்கு-ரோட்டு; கிழக்கு-முடி உருத்தாடும் ஏக்கலகுருந்துவத்த (பி. ப. 17,216/3; தெற்கு-வனிகசூரிய முதலியார் உருத்தாடும் கோறகஸ்கங்கவத்த.

II.—பிரதமபடம் 17,216.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 5 .. | பக்மீகாவத்த .. .. .. .. | 0 0 1·2 |

எல்லேகளாவன: வடக்கு-46,845 ம் உ ப. ல் விபரித்திருக்குங் காணி; கிழக்கு-கே. யூசேபெறருவும் மற்றவர்களுமுரித்தாடும் பக்மீகாவத்த (V. P. காணித்துண்டு 170); தெற்கு-47,427 ம் உ. ப. ல் விபரித்திருக்கும் காணி; மேற்கும் வடமேற்கும்-ரோட்டு.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 447—448 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 8,080, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1922 ம் ௵ (ஏப்பிறல்) சித்திரைமீ 28 ௳ தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ப்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளே அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்ப்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

### சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தேவமெதிகாத்பத்து கிறத்தலானக் கோறளை குறற்றிகேனக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க் குறிக்கப்படும் காணித்துண்டுகள் :—

இலங்கை யளவைப் பிரதமபடம் 1,818.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | எப்ப (எப்பவின் பகுதி) .. .. | 0 | 1 | 0 |
| 1½ | எப்ப ( ஷை ) .. .. | 0 | 0 | 18 |
| 2 | எப்ப .. .. .. | 0 | 1 | 4 |
| 3 | எப்பேகாவகேன (இடுகாடு) .. | 0 | 2 | 30 |
| 4 | எப்பேகாவகேன .. .. | 3 | 0 | 33 |
| 5 | எப்ப (பகுதி) .. .. | 0 | 1 | 10 |
| 6 | எப்ப .. .. | 0 | 0 | 29 |
| 7 | எப்பேகாவகேன .. .. | 0 | 3 | 19 |
| 8 | கன்சப்பாவறோட்டு .. .. | 0 | 3 | 0 |
| 9A | மினிப்பிற்றனிய .. .. | 0 | 1 | 5 |
| 10 | கெபெல்லகாமுலகேன, தமினகாமுலகேனவும், பிறவும் .. .. | 13 | 0 | 7 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 10A | காற்பாதை .. .. | 0 | 0 | 9 |
| 11 | கன்சபாவறோட்டு (பகுதி) .. | 1 | 0 | 8 |
| 13 | தமினகாகேன (பாதைச் சேமிப்பு) .. | 0 | 0 | 7 |
| 19 | காற்பாதையும், சேமிப்பும் .. | 0 | 0 | 10 |
| 20 | இகலதற்றன்டனுவேவெவ (குளமும் கட்டும்) .. .. | 3 | 0 | 27 |
| 21 | பகலதற்றன்டனுவேவெவ (குளமும்கட்டும்) | 2 | 1 | 9 |
| 22 | கோங்காமுலகேன (குளக்கட்டுச் சேமிப்பு) | 0 | 0 | 17 |
| 24 | கெபெல்லகாகேன (வளி உருத்து) .. | 0 | 1 | 2 |
| | | 27 | 0 | 4 |

எல்லைகளாவன : வடக்கு-எப்பவின் பகுதி (அக்குருனஒறற்றியாவக் கிராம வெல்லை), அக்குருனவவிலிருந்து மாறபகம்பியவுக்குப் போகும் றோட்டின் பகுதி, (மாறபகம்பியக் கிராம வெல்லை); கிழக்கு-மாறபகம்பியக் கிராம வெல்லை; தெற்கு-கறன்டப்பத்து கோறளையின் எல்லை; மேற்கு-அஸ்சனக்கொற்றுவக் கிராம வெல்லை, எப்பவின் பகுதி, (அக்குருன ஒறற்றியாவக் கிராம வெல்லை).

கவனிப்பு.—மேற்குறித்த வெல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலின் எப்பகுதியினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத் தொகையாகும் 53 ஏக்கர் 2 றூட் 12 பேட்சும் மேற்சொல்லிய 27 ஏக்கர் 4 பேட்சுக்குள்ளு மடங்கவில்லை யென்பதையுங் கவனிக்க வேண்டியது :—

இலங்கை யளவைப் பிரதமபடம் 1,818.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| A 9 | பகலகலகும்புற, மெதகலகும்புற, பிறவும் | 6 | 3 | 2 |
| A 23 | கன்கொலதோட்டம் (337,227 ம் உ. ப.ல் காணுங் காணி) .. .. | 34 | 1 | 18 |
| 12 | தமினகாவத்த .. .. | 0 | 0 | 27 |
| B 14 | கோஙகாமுல்லேவத்த .. .. | 0 | 2 | 18 |
| B 15 | ஷை .. .. | 0 | 2 | 22 |
| B 16 | புஞ்சிவத்த அல்லது கன்கொலவத்த .. | 2 | 1 | 38 |
| B 16A | கோங்காமுலயேன .. .. | 2 | 1 | 28 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| B 16B | கெபெல்லகாமுலயேன .. | 1 | 3 | 13 |
| B 16C | ஷை .. .. | 0 | 3 | 28 |
| B 17 | தமினகாமுல்லேவத்த .. .. | 0 | 1 | 5 |
| B 18 | காற்பாதை .. .. | 0 | 0 | 1 |
| B 25 | கன்கொலதோட்டம் .. .. | 3 | 0 | 15 |
| | | 53 | 2 | 12 |

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 449 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 19—1922.]

---

[அறிவித்தல் இல. 8,081, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் 1922 ம் ஹூ (ஏப்பிறல்) சித்திரைமீ 28 ௳ திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்ப்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்ப்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

### சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்கு தேவமெதிகாத்பத்து கிறத்தலானக்கோறளை ககற்றவில்லக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க் குறிக்கப்படும் காணித்துண்டுகள் :—

I.—இலங்கை யளவைப் பிரதமபடம் 1,802.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 5 .. | தல்காமுலயேன (குளக்கட்டுச் சேமிப்பு) .. .. .. | 0 | 2 | 7 |
| 5A .. | ஷை (றோட்டுச்சேமிப்பு) .. .. .. | 0 | 0 | 3 |
| 10 . | ஷை .. .. .. .. .. | 5 | 0 | 30 |
| 10A .. | ஷை (றோட்டுச்சேமிப்பு) .. .. .. | 0 | 0 | 18 |
| 10B .. | ஷை .. .. .. .. .. | 0 | 2 | 39 |
| | | 6 | 2 | 17 |

எல்லைகளாவன: வடக்கு-முடி யுரித்தாடும் கெலம்பகாவெவ (குளமும் கட்டும்); கிழக்கு-கிரிமெற்றியகமக் கிராம வெல்லை; தெற்கு-திஸ்சனுயக முதியான்செலாகே கிறிபண்டாவும் இன்னுமொருவரு முரித்தாடும் கிக்காகும்புற, திஸ்சனுயக முதியான்செலாகே கிறிபண்டாவும் மறுபேரு முரித்தாடும் அம்பலம்கும்புற; மேற்கு-லேகமலாகே கிறிமெனிக்காவும் மறுபேரு முரித்தாடும் அம்பலம்கும்புற அல்லது தல்காமுலகும்புற, லேகமலாகே பண்டா வுரித்தாடும் கெலம்பகாமுலவத்த, திஸ்சனுயகமுதியன்செலாகே உக்குமெனிக்காவும் இன்னுமொருவரு முரித்தாடும் கெலம்பகாமுலகொற்றுவ, மேற்படியார் உரித்தாடும் சியம்பலகாமுலவத்த.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 450 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

II.—இலங்கை யளவைப் பிரதமபடம் 1,802.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 80 .. | எகெற்றுகாமுலயேன்யாய; பாஹுகாமுலயேன்யாய, பிறவும் .. .. | 50 0 23 |
| 80A .. | மயிலகாமுலயேன .. .. .. .. | 0 3 29 |
| | | 51 0 12 |

எல்லைகளாவன: வடக்கு-திஸ்சனுயக முதியான்செலாகே கிறிபண்டாவு மறுபேரு முருத்தாடும் கிக்காகும்புற. மேற்படியார் உருத்தாடும் தல்காமுலவத்த, திஸ்சனுயக முதியான்செலாகே உக்குமெனிக்கா வுருத்தாடும் கோங்கமுல வத்த, திஸ்சனுயக முதியான்செலாகே மெனிக்காவு மறுபேரு முருத்தாடும் கோங்காமுலகேன்யாய அல்லது எகெற்றுகா முலயேன, முடி வுருத்தாடும் பகலவெவ (குளமும் கட்டும்), முடி வுருத்தாடும் இகலவெவ (குளமும் கட்டும்) முடி வுருத் தாடும் பகலவெவ (குளமும் கட்டும்) திஸ்சனுயக முதியான்செலாகே உக்குபண்டா வுருத்தாடும் கன்சூரியகாமுல கொற்றுவ, திஸ்சனுயக முதியான்செலாகே அப்புகாமி வுருத்தாடும் கிக்காகொற்றுவ, முடி வுருத்தாடும் பகலவெவ (குளமும் கட்டும்) காற்பாதை; கிழக்கு-காற்பாதை, கன்சப்பாவ ரேட்டு, எச். எல். டி. மெல் வுருத்தாடும் பாஹுகாமுல யேன்யாய; தெற்கு-மடயினக் கிராம வெல்லை; மேற்கு-வெலன்கொல்லக் கிராம வெல்லை, கினியமக் கோறளையின் எல்லை (எகொடபிற்றியக் கிராம வெல்லை).

[குருணுக்கல் வி. உ. 20—1922.]

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

மாத்தளை டிஸ்ரிக் கள்ளுக்குத்தகை.

இதன் கீழே காணப்படும் இடங்களில் 1922 ம் ௵ ஐப்பசி மாதம் 1 ௳ திகதி துவக்கம் 1923 ம் ௵ புரட்டாதி மாதம் 30 ௳ தேதி வரைக்குமுள்ள 12 மாதக் காலத்துக்கு சில்லறையாய்க் கள்ளு விற்பவர்களுக்கு கள்ளு விற்பனவுசெய் தலுக்காக 1922 ம் ௵ வைகாசி மாதம் 11 ௳ திகதி பின்னேரம் 2 மணிக்கு மாத்தளைக கச்சேரியில் பிரசித்த வெந்தீஸ் போடப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மாத்தளை உதவி அரசாட்சி ஏசன்றத்துரை யவர்களிடத்திலாவது அல்லது அந்த பிரிவிலுள்ள ரடேமஹத்மயா அவர்களிடத்திலாவது விற்பனவு கொந்தீஸ் காகிதங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

தேவையான நியாயங்கள் இருந்தாலன்றி கள்ளுக் குத்தகை வாங்க எத்தனித்திருப்போர் தவறணைகள் இல்லாத இடங்களில் மரங்கள் லைசன் பண்ணப்படமாட்டாது என்று அறிந்துகொள்க.

மாத்தளை கச்சேரி,
1922 ம் ௵ சித்திரைமீ 25 ௳ .

ஸீ. ஹெரிஸன் ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசன்று.

செடூல்.

மாத்தளை டிஸ்டிரிக்.

நொ. 11. .. மாத்தளை தெற்கு தென்னைவசம்.

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

புத்தளம், கொம்பிமூனை, இல்லையடி, உப்பளத்திலுள்ள உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கும் வேலையொப் பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர் தமது கேள்விப்பத்திரத்தை முத்திரித்த வுறையிலிட்டு அதனிடது பக்கத்து மூலையில் "கொம்பிமூனை உப்பளத்திலுள்ள உத் தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கும் வேலையின் ஒப் பந்தக்கேள்வி" யென்றெழுதி, புத்தளம் உதவி யேசண் டவர்களுக்கு 1922 ம் ஆண்டு வைகாசிமாதம் 8 ௳ திகதி பிற் பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக வனுப்ப வேண்டும்.

3. கேள்விக்காறன் கேள்விப்பத்திரத்தை யனுப்புமுந்தி எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டணைக்கவேண்டும்.

4. கேள்விக்காறன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப் பட்டபின் நியாயமான காலத்துள் தான் வேலையைக் கிரம மாக முடித்துப்போடுவதாக உதவி யேசண்டருடன் ஓர் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளாவிட்டால் கட்டிய முற் பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத் தக்கதாக புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டதின் 4 கிழமைக் குள் வேலையை முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத் துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

தற்போது அவ்வீடுகளிலுள்ள உழுத்தும் பழுதாயும் இருக்கு மரந்தடி முதலியவற்றை யெடுத்துப்போட்டு வேறு புதியஇருக்கு மரம் முதலியவற்றைப் போடவேண்டும்.

2 ம் கொன்ஸ்தாப்பின் வீடு, கொட்டில்க ளெல்லாவற்றை யும் புதுக் கிடுகினால் வேய்ந்து அதன்மேற் பாரமாகப் பூட் டுகளை வைக்க வேண்டும்.

வீடுகளெல்லாவற்றிலும் உள் நிலத்தை மண்போட் டுயர்த் திறுக்கி மட்டமாக்கவேண்டும்.

சுவர்களையுஞ் செத்தைகளையும் வேண்டிய இடங்களில் பழுதுபார்க்கவேண்டும். 2 ம் கொன்ஸ்தாப்பின் வீட்டுச் சுவர்களுக்கு வெள்ளையடிக்கவேண்டும். செத்தைகளுக்கு வேண்டிய இடங்களில் வரிச்சுப்பிடிக்கவேண்டும். கதவுகள் யன்னல்களெல்லாவற்றிற்கும் சிவப்பு மை பூசவேண்டும்.

நாலு காவற்காரருடைய வீட்டைப் பிடுங்கி திரும்ப புதுக் கிடுகினால் கட்டவேண்டும். கப்புகளும் பூட்டுகளும் கொடுக்கப்படும்.

வளவுகளிற் சுத்தியிருக்கிற வேலிகளெல்லாவற்றையும் திருப்பியடைக்கவேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளங் கச்சேரி,
1922 ம் ௵ சித்திரைமீ 12 ௳ .

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.